**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை: திரு.J.ராஜேஷ்குமார், எம்.எல்.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி (முழு கூடுதல் பொறுப்பு)**
திருவள்ளுவராண்டு, 2054 குரோதி வருடம், பங்குனி திங்கள் 04–ம் நாள்
2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18–ஆம் நாள் செவ்வாய்கிழமை
**அசல் வழக்கு எண். 643/2011**
(TNTS060002002011)

***1. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழக்கலங்கல் கிராமத்தில் இருக்கும் மூக்கன் மகனான சுமார் 73 வயதுள்ள கிருஷ்ணன்(இறப்பு).

2. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழக்கலங்கல் கிராமத்தில் இருக்கும் மூக்கன் மகனான சுமார் 55 வயதுள்ள திருமலைராஜ்.

3. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், கீழகலங்கல் கிராமம், கீழத்தெரு, கதவு எண்.1/7A ல் வசிக்கும் கிருஷ்ணன் மனைவி, 85 வயதுடைய செல்லம்மாள்.

4. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், கீழகலங்கல் கிராமம், கீழத்தெரு, கதவு எண்.1/7A ல் வசிக்கும் கிருஷ்ணன் மகன், 54 வயதுடைய குருசாமி.

5. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், கீழகலங்கல் கிராமம், கீழத்தெரு, கதவு எண்.1/7A ல் வசிக்கும் கிருஷ்ணன் மகன், 52 வயதுடைய குணசேகரன்.

6. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், கீழகலங்கல் கிராமம், கீழத்தெரு, கதவு எண்.1/7A ல் வசிக்கும் கிருஷ்ணன் மகன், 48 வயதுடைய ஞானசேகரன்.

7. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், கீழகலங்கல் கிராமம், கீழத்தெரு, கதவு எண்.1/7A ல் வசிக்கும் கிருஷ்ணன் மகன், 44 வயதுடைய சந்திரசேகரன்.

8. தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் வட்டம், கீழகலங்கல் கிராமம், கீழத்தெரு, கதவு எண்.1/7A ல் வசிக்கும் கிருஷ்ணன் மகன், 39 வயதுடைய மாரிமுத்து.

..... வாதிகள்

/எதிர்/

**1. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழக்கலங்கல் கிராமம், கதவு எண்.4/1/15 என்ற விலாசத்தில் இருக்கும் லேட்.மாடசாமி மனைவி, சுமார் 78 வயதுடைய மாரியம்மாள் (இறப்பு)

2. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழக்கலங்கல் கிராமம், கதவு எண்.4/1/15 என்ற விலாசத்தில் இருக்கும் மாடசாமி மகனான, சுமார் 48 வயதுடைய கருப்பசாமி.

3. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழக்கலங்கல் கிராமம், கதவு எண்.4/1/15 என்ற விலாசத்தில் இருக்கும் மாரியப்பன் மனைவியான சுமார் 28 வயதுள்ள வெள்ளையம்மாள்.

*(3ம் பிரதிவாதிக்காக 3ம் பிரதிவாதியின் பவர் ஏஜென்ட்டான கருப்பசாமி மூலம்)

* (Amended as per order in I.A1098/2012, Dated 30.07.2012)

** (Amended as per order in I.A78/2017, Dated 21.02.2017)

*** (Amended as per order in I.A9/2025, Dated 01.02.2025)

..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது பிராது தபசில் கண்ட சொத்து வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென பிரதிவாதிகளுக்கு எதிரில் விளம்புகை கோரியும், தபசில் சொத்தை பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளிடம் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரியும், தவறும்பட்சத்தில் கோர்ட் மூலம் சுவாதீனம் பெறவும் பிராது தபசில் சொத்தில் 3ம் பிரதிவாதி கட்டியுள்ள குடியிருப்பு வீட்டினை நீதிமன்றம் குறிப்பிடும் ஓர் தினத்திற்குள் இடித்து அப்புறப்படுத்தி கொடுக்க வலியுறுத்துக்கட்டளை கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்களும் வாதிகளுக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | : | 25.11.2011 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 25.11.2011 |

| | | |
|---|---|---|
| வழக்கு மூலம் | : | 10.08.33, 25.09.33, 12.02.34, 19.07.2011, 10.11.2011 ஆகிய தேதிகளில் வீ.கே.புதூர் வட்டம், கீழக்கலங்கல் கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| வழக்கின் மதிப்பு | : | "அ" பரிகாரத்திற்கு ஒரு வருட தீர்வை ரூ.0.15 பைசா x30 = ரூ.4.50/-<br>குறைந்த பட்ச மதிப்பு = ரூ.2,000/-<br>"ஆ" பரிகாரத்திற்கு ரூ.1,000/- |
| முத்திரைக்கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டம், பிரிவு 25(a)ன் படி "அ" பரிகாரத்திற்கு ரூ.150.50/-ம், பிரிவு 27(சி)ன் படி "ஆ" பரிகாரத்திற்கு ரூ.75.50/-ம் சேர்த்து ரூ.226/-க்கு கூடுதல் ரூ.1ம் சேர்த்து மொத்தம் ரூ.227/- செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (18.03.2025) விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராஜ்மகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், கட்டாய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், 2 முதல் 8 வாதிகளை அழைத்தும் ஆஜராகாததாலும், 2 முதல் 8 வாதிகளின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்பாணை

1. 2 முதல் 8 வாதிகளின் வருகை தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.
2. செலவு தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

## தபசில்

தென்காசி பதிவு மாவட்டம், ஊத்துமலை சார்பதிவகம், கீழக்கலங்கல் கிராமத்தில் புஞ்சை சர்வே எண்.430/3 நிரில் செண்டு 26 தபசில் சரி.

மால்கள்

சர்வே எண்.431 க்கு தெற்கு,
சர்வே எண்.430 ல் 14 க்கு வடக்கு,
சர்வே எண்.431 ல் 4 க்கும் மேற்கு,
சர்வே எண்.431 ல் 2A க்கும் கிழக்கு,

தபசில் விபரம் சரி.

2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்/–J.ராஜேஷ்குமார்**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**